
**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

# திராவிடப் போராளிகள்

26 ■ வழக்கறிஞர் அருள்மொழி

## தன்மானத் தமிழ் வளர்த்த நீலாம்பிகை!



**13.11.1938** பிற்பகல் ஒரு மணிக்கு பெத்து நாய்க்கன் பேட்டையில் இருந்து, ஐந்தாயிரம் பேர்கொண்ட பெண்கள் பெரும்படை ஒன்று பேரணியாய் வந்து ஒற்றைவாடை நாடகக் கொட்டகையை அடைந்தது. **‘மொழிப்போர்’** எத்தனையோ நாடுகளில் நடந்துள்ளது. ஆனால், தாய்மொழிக்காகவும் வேற்றுமொழித் திணிப்பை எதிர்த்தும் பெண்களே கூடி இப்படி ஓர் மாநாடு நடத்திய வரலாறு, நம் தமிழ்நாட்டுக்கு மட்டுமே உரியது. அந்த அடித்தளத்தை அமைத்தது, திராவிட இயக்கம். அந்த மாபெரும் **‘தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு’**க்குத் தலைமை தாங்கியவர் தமிழறிஞர் நீலாம்பிகை அம்மையார். அவரது தலைமை உரையில் எழுப்பிய அறிவுப்பூர்வமான கேள்விகள் இன்றைக்கும் பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன.

“வட நாட்டில் இருந்து வாணிபம் செய்வதற்கு இந்தி மொழியாளர்கள் ஏராளமாக இங்கே வருகிறார்கள். இச்சென்னை மாநகரில் ‘மார்வாடிகள்’ என்னும் பலர் உண்டியல் கடை வைத்திருக்கிறார்கள். மிட்டாய் எனும் இனிப்பு உணவு விற்கும் ‘லாலாக்கள்’ என்போரும் வடநாட்டினரே. பட்டாடை விற்கும் ‘சேட்ஸ்’ என்று சொல்லப்படும் துணி வாணிபரும் வடநாட்டினரே. இவ்வாறு ஏராளமான வடநாட்டு மக்கள் தமிழ்நாட்டில் வந்து தமிழர்களோடு இருந்து வாழ்ந்துதான் வருகிறார்கள்.

தமிழும் நன்றாகப் பேசுகிறார்கள். இன்னும் அடிக்கடி வடநாட்டில் ஏற்படுகின்ற பஞ்சத்தால் ‘பைராகிகள்’ போன்ற ஏழை எளியவர்கள் இங்கே பிழைக்க வருகின்றார்கள். இந்த வட நாட்டினர் எல்லாம் தொழில் முறையில் நம் தமிழர்களோடு பழக, வருமுன் வடநாட்டிலிருந்தே நம் தமிழைப் படித்துக் கொண்டு வருகிறார்களா?

எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக நம் தமிழ்மக்கள் இரங்கூன், ஆப்பிரிக்கா, மலேயா முதலிய வேற்று நாடுகளுக்குச் சென்று வாணிபஞ் செய்து வருகின்றனர்.

இவர்களெல்லாம் அந்நாடுகளுக்குப் போகுமுன் அந்நாட்டு மொழிகளைக் கற்றுக்கொண்டு போகிறார்களா? இல்லையே? வயிற்றுப் பிழைப்பைக் கருதி, பிறநாடு போக விழைபவர்கள் வேண்டுமானால், அந்நாட்டு மொழிகளைக் கற்றுக் கொண்டு போகட்டும். ஏனையோரும் கட்டாயமாய்ப் படிப்பதேனோ?”. இப்படி பல கேள்விகள் மூலம் ராஜாஜியை உலுக்கியது அம்மையாரின் தலைமை உரை.

### மகள் அல்ல, மாணவி

1903–ஆம் ஆண்டு செப்டம்பர் 3–ஆம் நாள் பிறந்த நீலாம்பிகை, தனித்தமிழியக்கம் கண்ட மறைமலை அடிகளின் அன்பு மகள். தாயார் பெயர் சவுந்தரவல்லி. அவரது கணவர் திருவரங்கன் சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழகத்தை நிறுவியவர். இருவரும் காதல் கொண்டு பல ஆண்டுகள் காத்திருந்து பெற்றோரின் இசைவினைப் பெற்றுத் திருமணம் புரிந்தனர்.

பெயருக்கு முன்னெழுத்துப் போடும் பழக்கத்தைத் தவிர்த்துத் தன் காதல் கணவரின் பெயரையே முன்னால் சேர்த்து ‘திருவரங்க நீலாம்பிகை’ என்றே பெயர் சூடிக்கொண்டார். எட்டுப் பெண் குழந்தைகளையும் மூன்று ஆண் குழந்தைகளையும் பெற்றார். அவர்களின் மகன் மறை திருநாவுக்கரசு சிறந்த ஆய்வறிஞர். சங்க இலக்கியங்களுக்கு எளிய தமிழில் உரை எழுதிப் புகழ்பெற்ற புலியூர் கேசிகன், நீலாம்பிகையாரின் மருமகன்.

நீலாம்பிகை அம்மையார் தமிழும் ஆங்கிலமும் சமஸ்கிருதமும் கற்றவர். இசையில் ஈடுபாடு கொண்டு தமிழ்ப்பண்களைப் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர். சென்னை, லேடி வெலிங்டன் கல்லூரியில் ஆங்கிலம் படித்தார். தன்னை மறைமலை அடிகளாரின் மகள் என்பதைவிடவும், மாணவி என்று அழைத்துக்கொள்ளவே விரும்பினார். தந்தையுடன் அவர் நடத்திய அறிவார்ந்த உரையாடல்கள், அக்காலத்தில் மிகப் புதுமையான ஒன்று.

சைவ சமயப் பணி, தனித்தமிழ் இயக்கத் தொண்டு இவற்றுடன் தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட நீலாவதி அம்மையார் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று உரையாற்றினார்.

### தமிழின் இனிமை துலங்க...

திருமணத்துக்குப் பின் சிலகாலம் திருநெல்வேலியில் வாழ்ந்தார். பின் சென்னையில் சில ஆண்டுகள் பள்ளித் தமிழாசிரியராகவும் சென்னை, ராயபுரம், நார்த்விக் மகளிர் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். அப்போது அப்பதவிக்கு **‘தலைமைத் தமிழாசிரியர்’** என்று பெயர்.

**‘ஒருமைக்கண் தான் கற்ற கல்வி / எழுமையும் ஏமாப் புடைத்து’** என்றார் வள்ளுவர். நீலாம்பிகை அம்மையார் தான் கற்ற கல்வியின் பயனை முழுமையாக சமூகத்துக்கே அளித்தார். சமஸ்கிருதம் எனும் வடமொழியைக் கற்ற பலர், ஆரியத்தின் மொழி ஆதிக்க அரசியலுக்கு இரையாகி வடமொழிதாசர்களாக மாறியதுண்டு. ஆனால், நீலாம்பிகை அம்மையாரோ சமஸ்கிருதச் சொற்களை நீக்கினால்தான் தமிழ்மொழியின் இனிமை துலங்குகிறது என்பதை உணர்ந்தார். வடமொழிச் சொற்களை தமிழ்மொழியில் இருந்து நீக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். அதற்காக **‘வடசொல் தமிழ் அகரவரிசை’** என்ற நூலை எழுதினார்.

### மேற்கத்திய வீராங்கனைகள் அறிமுகம்

சைவ சமயப் பற்றுடையவராக இருந்த போதும் நீலாம்பிகை அம்மையாரின் விரிந்த பார்வையும், ஆங்கிலக் கல்வியும், ஆராய்ச்சி அறிவும் மேல் நாட்டுப் பெண்களின் துணிவு மிக்க வாழ்க்கையை தமிழ்நாட்டுப் பெண்கள் அறிய உதவியது. அதற்காகவே அவர் பிரான்சு நாட்டு வீராங்கனை **‘ஜோன் ஆஃப் ஆர்க்’** கின் கதையையும், **‘பிளாரன்ஸ் நைட்டிங்கேல்’** இன் கதையையும் நூலாக எழுதினார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பகுதியில் இங்கிலாந்து நாட்டின் சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகப் போராடி, இங்கிலாந்துச் சிறைகளை சீர்திருத்திய ‘எலிசபெத் ஃபிரை’ (*Elizebeth Fri*) என்ற பெண்மணியின் வீரவரலாற்றையும், 1800களின் இறுதியில் சமூக அக்கறையுடன் கவிதைகளைப் படைத்த ‘எலிசபெத் பேரட் பிரௌனிங்’ (*Elizabeth Barrett Browning*) என்ற கவிஞரின் எழுத்துகளையும் வரலாற்றையும் தமிழ்ப் பெண்களுக்கு அறிமுகம் செய்தார்.

இவற்றைத் தவிர, ‘தனித் தமிழ்க் கட்டுரைகள்’, ‘தமிழ் நாடும் தமிழ்மொழியும் முன்னேறுவதெப்படி?’, ‘ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும் ஆங்கிலப் பழமொழிகளும்’, ‘அருஞ்செயல் மூவர்’, ‘பழந்தமிழ் மாதர்’, ‘நால்வர் வரலாறு’, ‘முப்பெண் மணிகள்’ ஆகிய நூல்களையும் படைத்தார்.

### ஆஸ்துமாவுக்கு இடையே அருஞ்செயல்கள்!

அம்மையாருக்கு இளவயது முதல் ஆஸ்துமா நோயின் தாக்குதல் இருந்துள்ளது. ஒரு வகையான சளி இருமல் தொற்றினாலும் துன்பப்பட்டுள்ளார். அந்நிலையில், பதினோரு பிள்ளைகளைப் பெற்று வளர்த்ததோடு, ஆசிரியராகவும் வேலைபார்த்தபடியே பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றதோடு இத்தனைப் படைப்புகளையும் உருவாக்கினார் என்ற உண்மை அவரது திறமை, நேர மேலாண்மை, உழைப்பு, செயல்திறன் ஆகியவற்றின் சான்றாக நிற்கின்றது.

சைவ சமயப் பணி, தனித்தமிழ் இயக்கத் தொண்டு இவற்றுடன் தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட நீலாவதி அம்மையார் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று உரையாற்றினார்.

பெண்கள் மூட நம்பிக்கைக்கு இரையாகக் கூடாது என்பதையும் தாய்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பைப் பெண்கள் உணர வேண்டும் என்பதையும் அம்மையார் எடுத்துரைத்தார். வியப்பை ஏற்படுத்தக்கூடிய அவரது வாழ்க்கைப் பாடம் குறித்து வரும் வாரத்தில் காண்போம்.

(வருவார்கள்...)

---

## மக்கள் அறிந்து கொள்வர்!


**ம**த்தியப் பிரதேசத்தில் பழங்குடியின இளைஞர் மீது சிறுநீர் கழித்த விவகாரத்தில் அம்மாநில பா.ஜ.க. அரசு அரசியல் செய்து வருகிறது. பாதிக்கப்பட்ட இளைஞன் தஸ்மத் ராவத்தை வீட்டுக்கு வரவழைத்து, பாதங்களைக் கழுவி பூஜை செய்த அம்மாநில பா.ஜ.க முதல்வர் சிவராஜ் சிங் சவுகான், அதை இந்தியா முழுவதும் பரவலாக்கி விளம்பரம் தேடினார். அதன் பின்னணியை யோசித்தால், பாதிக்கப்பட்ட பழங்குடி இளைஞன் மீது கரிசனமோ, ஆறுதலோ அதன் நோக்கம் கிடையாது என்பதே உண்மை. அடுத்த ஆறு மாதங்களில் மத்தியப் பிரதேசத்துக்கு சட்டமன்ற தேர்தல் வருவதால், அங்குள்ள பழங்குடி மக்கள் ஓட்டுக்களைத் தவற விடக்கூடாது என்கிற நோக்கமே காரணம். அந்த மாநிலத்தில் சுமார் 21 சதவிகிதம் பட்டியல் மற்றும் பழங்குடி சமூகம் உள்ளது. அதன் அடிப்படையிலேயே பட்டியல் இன இளைஞன் மீது கரிசனம் காட்டியுள்ளார் பா.ஜ.க முதல்வர்.

தீண்டாமைக் குற்றத்தில் ஈடுபட்ட பிரவேஷ் சுக்லா ஆளுங்கட்சி உறுப்பினர் என்பதுடன், பா.ஜ.க. எம்.எல்.ஏவின் ஆதரவாளர் என்ற நிலையிலும் அவர் மீது நடவடிக்கை எடுத்ததாகக் காட்டிக் கொண்டனர். பிரவேஷ் சுக்லாவின் வீடு இடிக்கப்பட்டதாகத் தகவல் பரவியதும், அவருக்கு புது வீடு கட்டிக் கொடுப்பதற்காக உயர்சாதி அமைப்புகள் நிதி வசூலில் ஈடுபட்டுள்ளன. “சிறுநீர் கழித்த வீடியோவில் உள்ளது, தான் இல்லை என்றும், நிகழ்வு நடந்தது தனக்கு நினைவில் இல்லை என்றும் கூறும் பாதிக்கப்பட்ட இளைஞர், தான் எப்போதும் தாக்கப்படலாம் என்கிற அச்சத்தில் உள்ளதாக கூறுகிறார். இப்படியாக அந்த வழக்கை நீர்த்துப் போகச் செய்யும் வேலைகளையும் ஆளுங்கட்சி சாதி பிரமுகர்கள் செய்து வருகின்றனர்.

சாதி ஆதிக்கமும் சனாதனக் கண்ணோட்டமும் மிகுந்துள்ள பா.ஜ.கவிடம் சமூக நீதியை எதிர்பார்க்க முடியாது. ஓட்டுக்காக நாடகமாடும் பா.ஜ.க.வினரின் உண்மை முகத்தை மக்கள் அறிந்து கொள்வார்கள்.

---

## :ப்ளாஷ்பேக்





எழில்மாறன்

### வழக்கு நிதி!

**அ**வசரநிலைப் பிரகடனம் அமலிலிருந்த காலகட்டத்தில், மிசாவில் கைதான கழகத் தொண்டர்களின் வழக்குகளை நடத்திட, கழகத்தின் சார்பாக வழக்கு நிதி வசூல் செய்து அனுப்பிடும்படி உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதினார், தலைவர் கலைஞர். என்னுடைய தந்தை, அன்றைய வார்டு செயலாளர், அருணாச்சலம் அவர்கள் கழகத் தோழர்களோடு சேர்ந்து, தேவகோட்டையில் மிசா நிதி திரட்டிக் கொண்டு, தலைவர் கலைஞரைக் காண கோபாலபுரம் இல்லத்துக்குச் சென்று அவரைச் சந்தித்த பிறகு எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**–எழில்மாறன், நகரத் துணைச் செயலாளர் தேவக்கோட்டை, சிவகங்கை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473

---


## கருவூலம்

### ஏவிய எம்.ஜி.ஆர்!

**1979–ஆம் ஆண்டு, காவல்துறையினர் சங்கம் வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் எனப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தை ஒடுக்க, ராணுவத்தை வரவழைத்தார் எம்.ஜி.ஆர். காவல்துறை ஆணையர் அலுவலகம் முன்பு நின்றிருந்த போலீசாரை சுற்றிவளைத்து, ராணுவம் அடித்து நொறுக்கியது. 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சங்கம் வைத்த காவலர்கள் வீடு புகுந்து கைது செய்யப்பட்டனர். மூன்றாயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். காவல்துறை சார் நிலை அலுவலர் சங்கத் தலைவர் நைனார்தாஸ் கைது செய்யப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டார். இந்த நடவடிக்கைக்கு எதிராக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார் கலைஞர். சட்டமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து உரையாற்றினார் பேராசிரியர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 176




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131